தற்போது இருக்கிற வரைமுறைப்படி பல்வேறு புதிய நிர்வாக அமைப்புகளை மேற்கொள்ள இருக்கிறோம் இந்தச் சட்டத்திருத்தத்தின்படி. ஆகவே தற்போது அதைச் செய்ய இயலாது. சட்டத்திருத்தம் காரணமாகத்தான் இது வருகிறது. அடுத்தபடியாக இந்தச் சட்டத்திருத்தம் தமிழ்நாடு சட்டமன்றத்தில் எப்போது வைக்கப்படும், ஏப்ரல் 23--க்குள் வைக்கப்படுவதற்கான சாத்தியக்கூறுகள், அறிகுறி இல்லை என்று சொன்னார்கள் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள். அப்படிப்பட்ட நிலைமை இல்லை. அரசு ஏற்கெனவே இது சம்பந்தமாக 'டாஸ்க்ஃபோர்ஸ்' ஒன்று – அதாவது ஒரு கமிட்டியை நியமித்து இருக்கிறது. அந்தக் கமிட்டி இதை எல்லாம் ஆராய்ந்து இந்தச் சட்டமன்றக் கூட்டத் தொடரிலேயே, குறித்த காலத்திலே அந்தச் சட்டத்திருத்தத்தை அரசு கொண்டுவர இருக்கிறது. இது சம்பந்தமாக பலமுறை மாண்புமிகு இதயதெய்வம், முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் இந்த அவையிலேயே அறிக்கை வெளியிட்டிருக்கிறார்கள், சொல்லியிருக்கிறார்கள் என்பதைத் தெளிவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 118, திரு. ஆ. பாலையா, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

118-

தலக்குளம் ஊராட்சியைத் திங்கள்நகர் பேரூராட்சியுடன் இணைத்தல்.

* 22611—திரு. ஆ. பாலையா :

மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குருந்தன்கோடு ஊராட்சி ஒன்றியம், தலக்குளம் ஊராட்சியை திங்கள்நகர் பேரூராட்சியில் இணைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது இணைக்கப்படும்?

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) வினா எழாது.

திரு. ஆ. பாலையா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் தலக்குளம் ஊராட்சியை திங்கள்நகர் பேரூராட்சியோடு இணைப்பதற்கு இயலாது என்று சொன்னார்கள். நான் மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். தலக்குளம் ஊராட்சி ஒரு பின்தங்கிய ஊராட்சி மட்டுமல்ல. ஒரு சின்னஞ்சிறிய ஊராட்சி. அந்த ஊராட்சியால்

1994 மார்ச் 28]

அங்கே இருக்கிற மக்களுக்குத் தேவையான வசதிகள் குறிப்பாக குடிநீர் வசதி, மின்சார வசதி, சுகாதார வசதி போன்றவைகளைச் செய்ய முடியாத நிலைமையிலே பொருளாதாரத்திலே பின்தங்கிய நிலையிலே இருந்து கொண்டிருக்கிறது. திங்கள்நகர் பேரூராட்சி ஒரு தேர்வுநிலைப் பேரூராட்சி. அந்தப் பேரூராட்சி அதிக வருவாய் உள்ள பேரூராட்சி அந்தப் பேரூராட்சியோடு தொட்ட பகுதிதான் தலக்குளம் ஊராட்சி. எனவே அந்த ஊராட்சியை திங்கள்நகர் பேரூராட்சியோடு சேர்த்தால் தலக்குளம் ஊராட்சியிலே வாழ்கிற மக்களுக்கு எல்லாவிதமான அடிப்படை வசதிகளையும் செய்துகொடுக்க முடியும். ஆகவே அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்து தலக்குளம் ஊராட்சியை திங்கள் நகர் பேரூராட்சியோடு இணைப்பதற்கு ஆவன செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 11.10

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்த கருத்தின் அடிப்படையில்தான் இந்த தலக்குளம் ஊராட்சியை திங்கள்நகர் பேரூராட்சியோடு இணைப்பதற்கான நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டு வந்தது. ஆனால் இடையிலே நிறுத்திவைக்கப்பட்டிருக்கிறது. நான் ஏற்கெனவே மாண்புமிகு உறுப்பினர் சோ. பாலகிருஷ்ணன் அவர்களுக்குத் தெரிவித்த பதிலிலேகூட தெளிவாகக் குறிப்பிட்டிருந்தேன். இந்திய அரசியலமைப்புச் சட்டத் திருத்தத்தின் காரணமாகத்தான் தற்போது இது நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. தலக்குளம் ஊராட்சியைப் பொறுத்தவரை, அங்கேயிருக்கின்ற பிரச்சினை, அடிப்படைப் பிரச்சினை இருக்கிறது என்று சொன்னால், அரசு நிச்சயமாக அதிலே தலையிட்டு அந்த மக்களுக்குத் தேவைப்படுகின்ற அடிப்படை வசதிகளைப் பெறுவதிலே ஆர்வம் மேற்கொள்ளும், அதற்குண்டான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்று தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 119, டாக்டர் வெ. சரோஜா, மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர்.

119-

ஆதிதிராவிட விடுதி மாணவ, மாணவிகளுக்கு மருத்துவப் பரிசோதனை செய்தல்.

**22353—டாக்டர் வெ. சரோஜா :*

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—